**சவூதியினால் நிதியளிக்கப்பட்ட வீதி வலைப்பின்னல் அபிவிருத்தி செயற்திட்டம் - 2019**

---

சவூதியினால் நிதியளிக்கப்பட்ட வீதி வலைப்பின்னல் அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னைய துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. மத்திய, கிழக்கு, சப்ரகமுவ, மேற்கு மற்றும் வட மத்திய மாகாணங்களிலுள்ள 06 வீதிகளின் 131.50 கிலோமீற்றர் பிரிவுகளினை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 10,628 மில்லியனுக்குச் சமனான யூஎஸ்டொ. 81.75 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் ரூபா 7,800 மில்லியனுக்குச் சமனான யூஎஸ்டொ. 60 மில்லியனை நிதியளிப்புச் செய்வதற்கு அபிவிருத்திக்கான சவூதி நிதியம் இணங்கியிருந்தது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளை 2013 யூன் 03 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2020 ஒகஸ்ட் 05 இல் பூர்த்திசெய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்டது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | கூட்டு மொத்தம் ரூபா 445 மில்லியன் வெளிவளங்கள் திணைக்கள அறிக்கையின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டிற்கான கடன் வழங்கும் முகவரினால் செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்தும், கூட்டு மொத்தம் ரூபா 218 மில்லியன் மாத்திரமே கடனாக கணக்கிடப்பட்டிருந்தது. அதன் பெறுபெறாக, கடன் கணக்கு நிதிக்கூற்றக்களில் ரூபா 227 மில்லியனினால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | சொத்துக்கள் மற்றும் பொறுப்பக்களின் குறைமதிப்பீடு. | 2019 ஆம் ஆண்டிற்கான செயற்திட்டத்திற்காக மொத்த வழங்கல் ரூபா 488,291,683.34 ஆகவிருந்தது, ஆனால் பொது கணக்குகள் திணைக்களமானது 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 218,455,012.00 மாத்திரமே கணக்கிட்டிருந்தது. | உண்மையான மொத்த வழங்கல்கள் செயற்திட்டத்தினால் கணக்கிடப்படல் வேண்டும். |
| (ஆ) | 2015 இலிருந்த தெஹியோவிட்ட – தரனியாகல – நூரி வீதியின் காணி கொள்வனவு செயன்முறையின் மீது செலுத்தப்படாத நிள அளவை கட்டணங்கள் ரூபா 1.8 மில்லியன் தொகையினை கேட்டு மூன்றாம் தரப்பினரால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இருப்பினும், அதன் மீது எழுந்த நிகழத்தக்க பொறுப்பு இலங்கை பொததுறை கணக்கீட்டு நியமங்கள் இல.08 இன் பிரகாரம் நிதிக்கூற்றக்களில் வெளிப்படுததப்பட்டிருக்கவில்லை. | சாத்தியமான பொறுப்புக்கள் நிதிக்கூற்றக்களில் காட்டப்படாமலிருக்க லாம். | கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளதுடன் 2020 ஆம் ஆண்டில் ஒரு பொறுப்பாக இத் தொகையினை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிகழத்தக்க பொறுப்புக்கள் இலங்கை பொதுத்தறை கணக்கீட்டு நியமங்கள் இல.08 இன் பிரகாரம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை பொதத்தறை கணக்கீட்டு நியமங்கள் இல.08 இற்கு முரணாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பிற்காக செலுத்த வேண்டிய தாமதவட்டிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மற்றும் பொறுப்பக்களின் குறைமதிப்பீடு. | 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றில் செலுத்தப்பட்ட இழப்பீட்டிற்கான வட்டியை அட்டுறுசெய்ய கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | ஏற்பாடுகள் இலங்கை பொதத்தறை கணக்கீட்டு நியமங்கள் இல.08 இன் பிரகாரம் செய்யப்படல் வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

| இல | உருப்படி | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | வீதிகளின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல். | கண்டி – யாழ்ப்பாணம் வீதியிலுள்ள நாவுல நகரத்தின் 53+740 தொடக்கம் 58+000 வரையான பிரிவின் மீள்நிர்மானம் மற்றும் மேம்படுத்தல் 2018 திசெம்பர் 04 இல் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வேலைகள் 2020 செப்தம்பர் 4 அளவில் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டிருந்தது, இருப்பினும், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, 63 சதவீதமான செயலாற்றல் மாத்திரமே அடையப்பெற்றிருந்தது. | மந்தகதியான திட்டமிடல் காரணமாக செயற்திட்டத்தின் கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியம். | அபிவிருத்திக்கான சவுதி நிதி ஒரு வீதி பிரிவு மற்றும் மூன்று பாலங்களை மேம்படுத்த கடனின் மிகுதி தொகையினை பயன்படுத்த அனுமதி வழங்கியிருந்தது. | வீதிகளின் வேலைகளின் மிகுதி புனரமைப்பினை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பாலங்களின் புனர்நிர்மானம் மற்றும் மேம்படுத்தல். | ஒருகொடவத்த - அம்பத்தல வீதி மீதுள்ள இரண்டு பாலங்களின் புனர்நிர்மானம் செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் வேலைகளை ஆரம்பிக்காமல் 2019 ஜூன் 05 மற்றும் 2020 சனவரி 17 இல் ஆரம்பித்தது. 2019 திசெம்பர் 31 வரை செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் மொத்த செலவீடு 78.1 மில்லியனாகவிருந்தது. அதில் ரூபா 23.7 மில்லியன் 2016 சனவரி தொடக்கம் 2019 திசெம்பர் வரையுமான காலத்துடன் தொடர்புபட்டதாகும். மேற்கூறிய பாலங்களின் நிர்மானம் செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் செய்யப்பட்டிருந்தால், அச்செலவினங்களை தவிர்த்திருக்க முடியுமாகவிருந்திருக்கும். | மந்தகதியான திட்டமிடல் காரணமாக செயற்திட்டத்தின் கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியம். | உண்மையான வேலைப்பரப்பின் பிரகாரம், அது 06 வீதிகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருந்ததுடன் மிகுதி கடன் தொகை மேற்கூறிய செயற்திட்டங்களின் பின்பகுதியிலே அடயாளப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, கொடையளிப்பாளர் ஒப்புதல் மேலதிக 04 ஒப்பந்தங்களை அமுல்படுத்த தேடப்பட்டது. | வீதிகள் மற்றும் பாலங்களின் வேலைகளின் மிகுதி புனரமைப்பினை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | வேறான கொடுப்பனவு உருப்படிகள் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தின் கிரயத்தினை மேற்கொள்ள ஒப்பந்ததாரரினை அனுமதிப்பமனூடாக வீதி புனரமைப்பு வேலைகள் மீதான அளவைப்பட்டியல்களில் செய்யப்பட்டிருந்தமை, ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 இன் கீழான ஏற்பாடுகளிற்கு முரணாக காணப்பட்டது. இதன்படி, கூட்டுமொத்தம் ரூபா 2.4 மில்லியன் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரங்களின் கிரயத்தினை மீளப்பெற்றுகொள்ள ஒப்பந்ததாரரிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்ததாரர்களிற்கு தேவையற்ற நன்மைகள். | ஒப்பந்த நிபந்தனையின் பிரகாரம், ஒப்பந்ததாரர் அவரது சொந்த செலவில் செயலாற்றல் பாதுகாப்பினை வழங்க வெண்டும். இரப்பினும், வழமையாக பீஓகியுவ் உருப்படிகள் அதற்காக வழங்கப்படுவதுடன் இல்லாவிடில், ஒப்பந்ததாரர் வேறொறு பீஓகியவ் உருப்படிகளிள் இக் கிரயத்தினை உள்ளடக்க/ வழங்க வேண்டும். | அளவைகள் பட்டியலின் மதிப்பாய்வு விலைமனு ஆவணங்களை பிரசுரிப்பதற்கு முன்னர் பெறுகை நிபுனர் மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவினால் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | காணி சுவீகரிப்பு செயன்முறைகள் 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தும்இ செயன்முறையானது இன்னும் நடைமுறையிலே உள்ளது. 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1449 காணித்துண்டுகளில் 5 காணித்துய்டுகளிற்காக ரூபா 67.4 மில்லியன் தொகை இழப்பீடு செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 3.2 மில்லியன் தாமத வட்டியாகவும் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் செயற்திட்டமானது 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட காணி சுவீகரிப்பு சட்டத்தின் உபபிரிவு 44 இன் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் எவ்வித காணித்துண்டுகளையும் பதிவு செய்திருக்கவில்லை. | கொடுப்பனவுகளை கொடுத்து தீர்ப்பதில் தாமதத்தின் காரணமாக இழப்பீடுகள் மீதான வட்டி கிரயங்கள் அதிகரிப்பதற்கான சாத்தியம். | காணிகள் எல்ஏஆர்கியுவ் (டியுசுஞ) விற்கான செலுத்த வேண்டிய வட்டி கொடுப்பனவுகளின் தீர்ப்பனவின் பின்னர் பதிவு செய்யடல் வேண்டியதுடன் உரிய பிரதேச செயலக அலுவலகங்களில் அதன் மீது ஓர் தாமதம் காணப்படுவதுடன் வேலைகளை துரிதப்படுத்த அவர்களிற்கு ஞாபக மூட்டல்கள் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது. | இழப்பீடுகளை செலுத்தி அதன் மீதான மேலதிக செலவுகளை தவிர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |